# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - பிப்ரவரி 7, 2026 Weekly E-paper • February 7, 2026




# புலியா, வரிப் புலியா?

சுப. வீரபாண்டியன்

## தொடர வேண்டும் திராவிட மாடல் ஆட்சியும், முதல்வர் ஸ்டாலினும் !

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

## அது மக்கள் மன்றம்!

தலையங்கம்

## சமூகநீதி தி.மு.கழக ஆட்சியை தமிழ்நாடு பெஸ்ட் கூட்டமைப்பு ஆதரிக்கும்!

செ. ராஜா

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - பிப்ரவரி 7, 2026

Weekly E-paper ● February 7, 2026


# புலியா, வரிப் புலியா?

சுப. வீரபாண்டியன்

*ஊழலை ஒழிக்கப் புறப்பட்டு விட்டதாய், ஊரெங்கும் முரசறைந்து கொண்டிருக்கும், த.வெ.க தலைவர் விஜய், கட்ட வேண்டிய வரியை மறைத்ததற்காக, வருமான வரித்துறை அவருக்கு 1.5 கோடி ரூபாய் தண்டம் விதித்தது சரியானதே என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது!*



*2015 ஆம் ஆண்டு, அவர் வீடு சோதனையிடப்பட்ட போது, ஆவணங்கள் பல கைப்பற்றப்பட்டன! அந்த ஆண்டிற்கான தன்னுடைய வருமானம் 35.42 கோடி என்று அவர் அறிவித்திருந்தார். ஆனால் அந்த வருமானத்தில், புலி என்னும் படத்தில் நடித்ததற்காக அவர் பெற்ற 15 கோடி ரூபாய் கணக்கில் காட்டப்படவில்லை!*

*அதன் மீது விசாரணை நடத்திய வருமான வரித்துறை 2022 ஜூன் மாதம் 1.5 கோடி ரூபாய் தண்டம் (Fine) விதித்தது !*

*அதையும் கட்ட மறுத்து, அவர் நீதிமன்றத்திற்குச் சென்றார். இப்போது சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதி, செந்தில் ராமமூர்த்தி அவர்கள், வருமான வரித்துறையின் அந்தக் குறிப்பிட்ட நடவடிக்கை சரிதான் என்று தீர்ப்பளித்திருக்கிறார்!*

*அடுத்த கட்டமாக, அவர் உச்ச நீதிமன்றத்திற்கு, மேல் முறையீட்டுக்குச் செல்லலாம். இருப்பினும், விஜய் தரப்பிலிருந்து நீதிமன்றத்தில் என்ன வாதம் வைக்கப்பட்டது என்பதை நாம் கவனிக்க வேண்டும்!*

*எந்த ஒரு வருமானத்தையும் மறைக்கவில்லை என்று அவர் தரப்பு வாதம் முன்வைக்கப்படவில்லை. மாறாக, 2019 ஆம் ஆண்டிற்குள் தண்டம் விதித்திருக்கப்பட வேண்டும். ஆனால், அதனைத் தாண்டி மூன்று ஆண்டுகளுக்குப் பிறகே வருமான வரித்துறை தன் முடிவை அறிவித்தது. எனவே அது செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்பதுதான் விஜய் தரப்பு முன்வைத்த வாதம்!*

*இப்போது அந்த வாதத்தையும் உயர்நீதிமன்றம் புறக்கணித்து விட்டது! இதனைத் தவிர்த்து வேறு காரணங்களுக்காக மட்டுமே மேல்முறையீட்டுக்குப் போகலாம் என்று கூறிவிட்டனர்!*

*இதுபோன்ற வருமான வரித்துறை தொடர்பான வழக்குகள் ஏற்கனவே பல நடந்துள்ளன. இனியும் நடக்கும் ! ஆனாலும் ஊழலை ஒழிப்பதே தன் வாழ்நாள் லட்சியம் என்று சொல்லி, அதற்காகவே ஒரு கட்சியையும் தொடக்கி இருக்கிற விஜய் அவர்கள், தன்னளவில் கூட நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்பதையே இது காட்டுகிறது!*

*ஊழலை வேட்டையாடும் புலியாகத் தான் புறப்பட்டுள்ளதாகக் கூறிக் கொள்ளும் விஜய், புலி படத்தில் நடித்ததற்காக பெற்ற தொகையைக் கூட கணக்கில் காட்டவில்லை என்றால், நமக்குள் ஒரு கேள்வி எழுகிறது - இவர் புலியா இல்லை வெறும் வரிப் புலியா?* ●

# தொடர வேண்டும்
# திராவிட மாடல் ஆட்சியும், முதல்வர் ஸ்டாலினும் !

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தர்க் கியல்பு" என்கிறார் அய்யன் திருவள்ளுவர். "துணிவு,இரக்கசிந்தை,அறிவாற்றல்,உயர்ந்தகுறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் அரசுக்குரிய தகுதிகளாகும்" என்ற இக்குறளின் பொருளுக்கேற்ப ஆட்சி நடத்துகிறார் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின்.

மும்மொழிக் கொள்கையை ஏற்க மறுத்ததால் பள்ளிக் கல்வித்துறைக்கான நிதியை நிறுத்தி வைத்திருக்கும் ஒன்றிய அரசு, அரசின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளுக்கு முட்டுக்கட்டைபோடும்வகையில்சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் தாமதிக்கும் தமிழ்நாடு ஆளுநர், தி.மு.க அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள், டாஸ்மாக் உயர் அதிகாரிகள் ஆகியோர் மீது வழக்கு தொடர்ந்து நெருக்கடிகள் கொடுக்கும் அமலாக்கத்துறை உள்ளிட்ட ஒன்றிய அரசின் விசாரணை அமைப்புக்கள், தங்கள் வரையறையைத் தாண்டி அரசை விமர்சிக்கும் பா.ஜ.க பின்புலத்தைக் கொண்ட நீதிபதிகள் என நாற்புறமும் நெருக்கடிகள் சூழ்ந்திருக்கும் சூழலில் அஞ்சாமல், கொண்ட கொள்கையில் உறுதியோடு நிற்கிறார் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின். அது மட்டுமின்றி ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே பண்பாடு என இந்தியாவின் பன்முகத் தன்மையை சிதைத்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தி ஒற்றையாட்சியை நிறுவ நினைக்கும் ஒன்றிய மோடி அரசை துணிவோடு எதிர்த்து நிற்கும் முதல்வர் அவர்.

விபத்தில் சிக்கியோர் உயிர் காத்திட "நம்மை காக்கும் 48", மூத்த குடிமக்கள் உடல் நலம் காத்திட "மக்களைத் தேடி மருத்துவம்", மூத்த குடிமக்களின் மனநலத்தை மேம்படுத்த "அன்புச் சோலை முதியோர் மனமகிழ் வளமையங்கள்", 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதரவற்ற குடும்ப அட்டைதாரர்களின் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று ரேஷன் பொருட்களை வழங்கும் "தாயுமானவர்",

பெற்றோரை இழந்த குழந்தைகள் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் ரூ.2,000 உதவித்தொகை வழங்கிடும் “அன்புக் கரங்கள்” போன்ற பல்வேறு திட்டங்கள் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரக்க மனதை வெளிப்படுத்துகிறது.

ஆண்டுதோறும் 10 லட்சம் இளைஞர்களின் திறன்களை வளர்த்து அவர்களுக்குப் பன்னாட்டு நிறுவனங்களில் பொருத்தமான வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தரவும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு, உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் மற்றும் UPSC, TNPSC போன்ற போட்டித் தேர்வுகளுக்குச் சிறப்புப் பயிற்சிகளை வழங்கவும் வகை செய்யும் "நான் முதல்வன்", 20 லட்சம் பேருக்கு இலவச மடிக்கணினி, "உலகம் உங்கள் கையில்", பள்ளி மாணவர்கள் கவனமாக படித்திட உதவிடும் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்", அரசுப் பள்ளி மாணவர்களின் உயர்கல்விக்கு உதவிடும் "புதுமைப்பெண் திட்டம் & தமிழ்ப் புதல்வன்", மகளிர் நலன் காக்க "விடியல் பயணத் திட்டம்", "மகளிர் உரிமைத் தொகை", என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த அறிவார்ந்த திட்டங்கள் எண்ணற்றவை.

TNWESafe(பெண்கள்), அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டம் (AIBP), புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS), முதல்வரின் காக்கும் கரங்கள், தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் புத்தாக்க இயக்கம் (StartupTN), 100 கோடி கூட்டு-உருவாக்க நிதி (Co-creation Fund), சிறுமைக் கடன் திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் "டிரில்லியன் டாலர்" பொருளாதார இலக்கை நோக்கி மு.க.ஸ்டாலின் அரசு வெற்றிகரமாக பயணித்து வருகிறது. 2024 - 25 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு 11.19% பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுள்ளது. கடைசியாக 2010-11ஆம் நிதியாண்டில் (தலைவர் கலைஞர் அரசு) 13.12% என்ற இரட்டை இலக்க வளர்ச்சி பதிவாகியிருந்தது

14 ஆண்டுகளுக்குப் பிறகு இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அய்யன் திருவள்ளுவர் வகுத்தளித்த அறிவார்ந்த தளத்தில் முன்னோக்கித் தமிழ்நாடு அரசைக் கொண்டு செல்லும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் "திராவிட மாடல்" அரசும், நம் தலைவர் மு.க.ஸ்டாலின் முதல்வராக்கத் தொடரவும் ஓய்வின்றி உழைப்போம்.

ஸ்டாலின் தொடரட்டும் !

தமிழ்நாடு வெல்லட்டும் !! ●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## அது மக்கள் மன்றம்!

2020 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலானலடாக்மோதல்குறித்துராணுவஜெனரல் எம்.எம்.நரவனே எழுதி, இதுவரை வெளிவராத புத்தகம் குறித்து - எழுதப்பட்ட கட்டுரையினைக் கையில்வைத்துக்கொண்டுநாடாளுமன்றஎதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தன் பேச்சைத் தொடங்கினார், 2026,பிப்ரவரி 2 ஆம் நாள், நாடாளுமன்றத்தில். உடனே பாஜக உறுப்பினர்கள் கூச்சம் குழப்பத்தில் ஈடுபட்டு, அவை ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்கட்சி உறுப்பினர்கள் சு.வெங்கடேசன், மாணிக்கம் தாகூர் போன்றோர் ராகுலைப் பேசவிடும்படி எழுந்து கேட்டதற்கு அவர்கள் உட்பட 8 உறுப்பினர்களை சஸ்பென்ட் செய்துள்ளார் அவைத்தலைவர்.

நாடாளுமன்றம் என்பது நாட்டு நிலைமைகள் குறித்து உறுப்பினர்கள் பேசவும், விவாதங்கள் செய்வதற்கு மான இடம். அது மக்கள் பணத்தால் கட்டப்பட்டது, பாஜகவின் அடாவடிக்கான இடம் அல்ல.

தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி சொல்வதைப் போல அங்கே ஆளும் கட்சியினர் நினைப்பதைப்போல எல்லாம் பேசமுடியாது. அப்படிப் பேசினால் அங்கே விவாதங்கள் கூட தேவையற்றவை ஆகிவிடும்.

ராகுல்காந்தியின் பேச்சு அல்லது கேள்விக்கு, அரசு உரிய விளக்கத்தைச் சொல்லிவிட்டால், தொடர்ந்து அவை சுமுகமாக நடைபெறும். அதைவிடுத்து சர்வாதிகாரத் தனமாக உறுப்பினர்களை அவை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள விடாமல், சஸ்பென்ட் செய்வதெல்லாம்

மக்களாட்சியின் மாண்புக்கு இழுக்கைத் தேடித்தரும் செயலாகும்.

இடைநீக்கம் செய்யப்பட்ட உத்தரவை, உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள ஏதுவாகத் திரும்பப்பெற வேண்டும், அவைத்தலைவர்.

அது மக்கள் மன்றம். மக்கள் பணத்தை வீணடிக்க யாருக்கும் அதிகாரம் இல்லை!







ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# சமூகநீதி தி.மு.கழக ஆட்சியை தமிழ்நாடு பெஸ்ட் கூட்டமைப்பு ஆதரிக்கும்!

**செ. ராஜா, மாநிலப் பொதுச் செயலாளர்,**
**தமிழ்நாடு பெஸ்ட் கூட்டமைப்பு.**



*கல்வியில் சிறந்து விளங்குவது தமிழ்நாடு. ஆசிரியர் தகுதி தேர்வு TN TET 2026 இல் தகுதி மதிப்பெண்கள் தமிழ்நாடு அரசால் குறைத்ததால், ஆயிரக்கணக்கான பட்டியலின SCA/SC/ST பிரிவினர் வெற்றிபெற்றுள்ளனர். பணியில் உள்ள ஆசிரியர்களின் பணிபாதுகாப்பு, பதவி உயர்வு உறுதி செய்யப்பட்டுள்ளன.*

*6 முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 (RTE Act) இன் படி, அன்றைய முதலமைச்சர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் தமிழ்நாட்டில், ஆசிரியர் தகுதித் தேர்வு (TNTET) நவம்பர் மாதம் 2011 ஆம் ஆண்டு அரசு ஆணை எண் 181 இன்படி அதிகாரப்பூர்வமாக நடைமுறைப்படுத்தப்பட்டு, முதல் முறையாக ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) மூலம் 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. 150 வினாக்கள் 150, மதிப்பெண்கள், 1.30 மணி நேரம். அனைத்து பிரிவினருக்கும் SCA/SC/ST உட்பட அனைவருக்கும் 60% மேல் (90 மதிப்பெண்கள் மேல்) தகுதி மதிப்பெண்களாக அறிவித்தது. அந்த தேர்வில் தகுதி பெற்றவர்கள் மிக மிக குறைந்த எண்ணிக்கை தான். தாள் I - 0.56, தாள் II - 0.17 , மீண்டும் TN TET துணைத் தேர்வு அதே ஆண்டில் தேர்வு 3. 00 மணி நேரம் தாள் I -3.73 , தாள் II - 2.43 சதவீதம் மட்டுமே தகுதி பெற்று, அடுத்து நியமன தேர்வே இல்லாமல் இடைநிலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டது. அதில் அதிக அளவு பாதிப்புக்கு உள்ளானது பட்டியலின பிரிவினரே. SCA/SC/ST இட ஒதுக்கீடு இருந்தும் தகுதி மதிப்பெண்கள் 60% என்பதால் யாரும் இடம் பெற இயலவில்லை என்பதை யாரும் மறக்க முடியாது. குறிப்பாக SCA 3% உள் இடஒதுக்கீட்டில் தகுதி பெற்றவர்கள் 'ஜீரோ'. இன்று கல்வியில் சிறந்த தமிழ்நாடு, சமூக நீதி திராவிட மாடல் அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் அது ஹீரோவாக மாற்றியுள்ளது, மகிழ்ச்சியைத் தருகிறது.*

*TN TET அதிமுக ஆட்சியில் 2012 இல் SCA/SC/ST 60% (90 மதிப்பெண்கள்), 2013 இல் 55% (85 மதிப்பெண்கள்), திமுக ஆட்சியில் 2025 இல் 40% (60 மதிப்பெண்கள்).*

*TN TET அதிமுக ஆட்சியில் 2012 இல் BC/MBC/BCM 60% (90 மதிப்பெண்கள்) திமுக ஆட்சியில் 2025 ல் 55% (75 மதிப்பெண்கள்).*

*கடந்த 15 ஆண்டுகள் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இந்த தேர்வில் வெற்றி பெறுவதற்கு பேருதவியாக இருந்தது.*

*தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் TN TET ஆசிரியர் தகுதி தேர்வு மதிப்பெண்கள் குறைத்தது குறித்தத் தமிழ்நாடு பெஸ்ட் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பேராசிரியர்கள் கூட்டமைப்பின் கோரிக்கை ஏற்று அரசாணை வெளியிட்ட சமூகழக சமூகநீதி திராவிட மாடல் அரசுக்கும், திமு கழகத்திற்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எங்கள் கூட்டமைப்பின் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*திராவிட மாடல் சமூகநீதி முதல்வருக்கு என்றென்றும் தமிழ்நாடு பெஸ்ட் ஆசிரியர், அரசு ஊழியர் கூட்டமைப்பு உறுதுணையாக, ஆதரவாக இருப்போம்!* ●